Register No. | | | | | | | | |

# TA3A

5752–23

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2023.

(Three – year Regular Course)

Second Year – Third Semester

CONSTITUTIONAL LAW – II

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "The Constitutions provides that Council of Ministers are collectively responsible to the lower house both at the Centre and States. Evaluate how far collective and individual responsibility is in actual practice in India.

   கீழ் அவைக்கு மைய மற்றும் மாநில அமைச்சரவை கூட்டுப் பொறுப்பேற்க அரசமைப்பு வகை செய்கிறது. இந்தியாவில் நடைமுறையில் கூட்டுப் பொறுப்பு மற்றும் தனிப்பொறுப்பு எவ்வளவு தூரத்திற்குள்ளது என்பதை எடுத்துரைக்கவும்.

2. "The Supreme Court of India may in its discretion grant special leave to appeal". Evaluate the scope of Special Leave Petition.

   "உச்சநீதிமன்றம் தன்னுடைய விருப்பத்தின் பேரில் தன்னிடம் மேல்முறையீடு செய்ய தனி அனுமதி வழங்கலாம்". சிறப்பு மேல் முறையீட்டு மனுவின் நோக்கெல்லையை எடுத்துரைக்க.

3. Critically analyse the provisions relating to the legislative relations between the Union and the States under the Indian Constitution.

   இந்திய அரசமைப்பு சட்டத்தில் மத்திய மற்றும் மத்திய அரசுகளுக்கிடையேயான சட்டமியற்றும் உறவுகளைப் பற்றி உள்ள வகையங்களை ஆராயவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Examine the importance of Doctrine of pleasure by citing relevant provisions and judicial decisions.

சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி மகிழ்ச்சிக் கோட்பாட்டின் முக்கியத்துவத்தை ஆராய்க.

5. "Trade and commerce shall be free throughout India" – Analyse.

"இந்திய முழுவதும் வாணிகம் மற்றும் தொழில் நடத்துவதில் தடையற்ற நிலை நிலவ வேண்டும்" ஆய்க.

6. Enumerate the privileges and Immunities of Members of Parliament and Legislative Assembly.

நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுடைய சிறப்புரிமைகள் மற்றும் சட்டவிலக்குகளை வரிசைப்படுத்துக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Money Bill.

பண மசோதா

(b) Doctrine of Territorial Nexus.

நிலவரைவுக் கோட்பாடு.

(c) D.C. Wadhawa V. State of Bihar.

D.C. வாதிவா எதிர். பீகார் அரசு.

(d) Res judicata in writ proceedings.

நீதிப்பேராணை நடவடிக்கைகளில் முரண்தடைக் கோட்பாடு.

(e) Administrative Tribunals.

நிர்வாக தீர்ப்பாயங்கள்.

(f) S.R. Bommai V. Union of India.

S.R. பொம்மை எதிர். இந்திய யூனியன்.

(g) Residuary Powers.

எஞ்சியுள்ள அதிகாரங்கள்.



PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of Law and decided cases. Give with cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Mr. Nalavan was awarded death sentence by the Special Court and it was confirmed by the High Court and Supreme Court with certain modifications. The convicted person filed a mercy petition to the executive authorities to Pardon him but during pendency of the petition the Supreme Court released the accused is it valid? Decide.

திரு. நளவனை சிறப்பு நீதிமன்றம் மரண தண்டனை குற்றவாளி என்று விதித்த தண்டனையை உயர்நீதிமன்றமும் மற்றும் உச்சநீதிமன்றமும் ஒரு சில திருத்தங்களுடன் உறுதி செய்தது. தண்டனை உறுதிசெய்யப்பட்டவர் கருணை மனுவை நிர்வாகத்துறைக்கு சமர்ப்பித்தார் அம்மனு நிலுவையில் இருக்கும் பொழுதே உச்சநீதிமன்றம் தண்டனை விதிக்கப்பட்டவரை விடுதலை செய்தது. இது நிலைக்கத்தக்கதா? தீர்மானிக்க.

9. The Parliament of India passed a Constitutional amendment making changes in the Constitutional provisions relating to the election of the President. The validity of the amendment was challenged on the ground that the States consent were not obtained. Is the challenge sustainable? Decide.

அரசமைப்பு சட்ட திருத்தத்தின் வாயிலாக குடியரசுத் தலைவர் தேர்தல் தொடர்பான அரசமைப்பு சட்ட பிரிவுகளில் மாற்றத்தை பாராளுமன்றம் கொண்டு வந்தது. இச்சட்டத் திருத்தமானது பல்வேறு மாநிலங்களின் ஒப்புதலின்றி கொண்டு வரப்பட்டதால் இது அரசமைப்பு சட்டத்திற்கு எதிரானது என்று எதிர்க்கப்பட்டது. இந்த எதிர்ப்பு நிலைக்கத்தக்கதா? தீர்மானிக்க.

10. State of Rajasthan enacted a law restricting the use of sound amplifiers. The law was challenged on the ground that the subject falls under the legislative competency of the Union. The state contended that the law is within the competence of the state to legislative. Decide.

ஒலி பெருக்கியை பயன்படுத்துவதில் கட்டுப்பாடுகள் விதித்து இராஜஸ்தான் மாநில அரசு சட்டம் இயற்றியது. இயற்றப்பட்ட சட்டமானது மத்திய பட்டியலின் கீழானது என்று கூறி இதன் செல்லுத்தன்மை வினவப்பட்டது. மாநில அரசானது இது தங்களுக்கான சட்டமியற்றும் அதிகாரம் என்று வாதிட்டது. தீர்மானிக்கவும்.